2010 மே 6]

என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆத்தூரில் இயங்கக்கூடிய வட்டாட்சியர் அலுவலகம் கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்கு முன்னால் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது. இப்போது அங்கே இருக்கக்கூடிய ரெக்கார்டுகள் எல்லாம் நனையக்கூடிய ஒரு சூழ்நிலையில் இருக்கின்றது. அதுபற்றி அங்கே பணியாற்றக்கூடிய வட்டாட்சியர் பல முறை என்னிடத்திலே கூறியிருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், அங்கே ஒரு புதிய வட்டாட்சியர் அலுவலகத்தைக் கட்டித் தருவாரா என்று தங்கள்மூலம் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் மிகவும் பழுதடைந்த நிலையிலே அலுவலகங்கள் இருப்பதாகக் கவலையோடு குறிப்பிட்டிருக்கிறார்கள். எது மிகவும் பழுதடைந்திருக்கிறதோ, அதற்கு முன்னுரிமை கொடுத்து, வருகின்ற காலத்திலே அரசு அவற்றைப் பரிசீலிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 144, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

144—

சார் பதிவாளர் அலுவலகம்

***57564—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, கண்டாச்சிபுரம் கிராமத்தில் சார் பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[2010 மே 6

(அ) மற்றும் (ஆ) கண்டாச்சிபுரத்தில் புதிய சார் பதிவாளர் அலுவலகம் திறக்கும் சாத்தியக்கூறுகள் குறைவாக உள்ள நிலையில், தற்போது புதிய சார் பதிவகம் திறக்க அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

முற்பகல் 9-55

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட கண்டாச்சிபுரம் பகுதியைச் சுற்றி கிட்டத்தட்ட நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. ஒருபுறம் அரகண்டநல்லூர், மணலூர்பேட்டை அருகிலே கிட்டத்தட்ட 14 கிலோ மீட்டர் தூரத்திலும், மறுபுறம் அனந்தபுரம், அன்னியூர் என 14 கிலோ மீட்டர் தூரத்தில்தான் சார் பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. அந்தப் பகுதியைச் சுற்றி பல இலட்சம் ஏக்கர் நிலங்கள் இருக்கின்ற காரணத்தால், கண்டாச்சிபுரம் கிராமத்திலே, ஒரு சார் பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டாச்சிபுரம் கிராமத்தில் புதிய சார் பதிவாளர் அலுவலகம் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். இந்தக் கேள்வியைப் பார்த்தவுடனேயே உயர் கல்வித் துறையினுடைய அமைச்சர் அவர்களும், ‘அது என்னுடைய கிராமம், அதில் கண்டிப்பாக அமைக்க வேண்டும்’ என்று கூறியிருக்கிறார்கள். வருகிற 11 ஆம் தேதி பதிவுத் துறை குறித்த மானியக் கோரிக்கை வர இருக்கிறது. அரசு ஆய்வு செய்து, கருத்தில் எடுத்து, பதிவு செய்யப்படும் ஆவணங்களினுடைய எண்ணிக்கையைப் பொறுத்து புதிய அலுவலகங்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையிலே இதுவும் நிச்சயமாக ஆய்வு செய்யப்பட்டு, நல்ல முடிவு அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

2010 மே 6]

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், எங்களது மாவட்டத்து அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உட்காருங்கள். விரைவில் நல்ல பதிலை எதிர்பார்க்கலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சிதம்பரம் தொகுதியில், ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியில் இயங்கி வருகின்ற சார் பதிவாளர் அலுவலகம் தற்போது வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. இந்த ஆண்டே அந்த அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தமட்டில், 574 சார் பதிவாளர் அலுவலகங்கள் இயங்கிக்கொண்டு வருகின்றன. இவற்றில் 50 சதவீத அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகுதான், பழைய கட்டடங்களெல்லாம் புதிய கட்டடங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. கடந்த நான்கு ஆண்டு காலத்தில், 45 சார் பதிவாளர் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான நிதியை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கித் தந்து, கட்டடங்கள் கட்டப்பட்டு, அவை பயன்பாட்டில் இருக்கின்றன. வருங்காலத்தில், பதிவாகும் ஆவணங்களினுடைய எண்ணிக்கையைப் பொறுத்தும், அதே நேரத்தில் நிதி நிலைமையைப் பொறுத்தும், கோரிக்கை கருத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். குருசாமி.

திரு. எஸ்.எஸ். குருசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதியில் அந்தியூரிலும், அம்மாப்பேட்டையிலும் சார் பதிவாளர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்றன. அவற்றிற்கு சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் முன்பு சொன்ன அதே பதிலைத்தான் சொல்ல விரும்புகிறேன். தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகுதான், வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கக்கூடிய சார் பதிவாளர் அலுவலகங்களெல்லாம் படிப்படியாக சொந்தக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டு வருகின்றன. 50 சதவீத அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களிலே இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஆண்டொன்றிற்கு அரசாங்கத்திற்கு இரண்டு கோடி ரூபாய் வாடகையாகச் செலவு ஏற்படுகிறது. எனவே, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பதிவு செய்யப்படும் ஆவணங்களின் எண்ணிக்கை அடிப்படையில் முன்னுரிமை அளித்து, வருங்காலத்தில் நிச்சயமாக அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 145, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

145—

நெல் கொள்முதல் நிலையம்

***58448—திரு. பெ. காமராஜ்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கோவைக்குளம் பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?